**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 06/2023**

**2023**ம் வருடம் டிசம்பர் திங்கள் 05ம் நாள் வாதிகள் தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு. C.துரைமுருகன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திருமதி. வேலம்மாள் (PW1) கிராமம்:
தந்தை / கணவர் பெயர் : தொழில் :
வயது :

<u>முதல்விசாரணை</u>:-

1. நான் இவ்வழக்கின் 1ம் வாதியாவேன். 2முதல் 7 வாதிகள் எனது மகன் மற்றும் மகள்கள். அவர்களுக்கும் சேர்த்து இந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. எனது முதல் கணவரான ஆண்டிச்சாமியின் இறப்பு சான்றிதழின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.1ஆகும். எனது இரண்டாவது கணவரான சுப்பையாவின் இறப்பு சான்றிதழின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.2 ஆகும்.

3. ஆண்டிச்சாமி பெயரிலுள்ள குடும்ப அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.3 ஆகும்.

4. சுப்பையா பெயரிலுள்ள குடும்ப அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.4 ஆகும்.

5. 1முதல் 7 வாதிகளின் ஆதார் அடையாள அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது (எண்ணம்-7) வா.சா.ஆ.5 ஆகும்.

6. 1ம் பிரதிவாதி நான் அளித்த மனுவின் பேரில் பிறப்பித்த உத்தரவின் கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகும்.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.